# வடக்கு மாகாண பொதுச்சேவையின் தொழிற்துறைத் திணைக்களத்தின் கீழ்க் காணப்படும் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2018

வடக்கு மாகாண சபையின் விவசாய அமைச்சின் கீழ்வரும் **அட்டவணை – I** இல் காட்டப்பட்டுள்ள பதவி வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சையானது வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் அவர்களால் **2018 நவம்பர் மாதமளவில்** யாழ்ப்பாணத்தில் நடாத்தப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி **19.10.2018** ஆகும்.

- **அட்டவணை – I**

| இல | பரீட்சைப் பெயர் | பரீட்சை இல | வெற்றிட எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01 | வடக்கு மாகாண பொதுச் சேவையின் நெசவுப் போதனாசிரியர் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2018 | I | 10 |
| 02 | வடக்கு மாகாண பொதுச் சேவையின் நெசவுப் போதனாசிரியர் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை – 2018 | II | |
| 03 | வடக்கு மாகாண பொதுச் சேவையின் சிறுகைத்தொழில் போதனாசிரியர் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2018 | III | 14 |
| 04 | வடக்கு மாகாண பொதுச் சேவையின் சிறுகைத்தொழில் போதனாசிரியர் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை – 2018 | IV | |
| 05 | வடக்கு மாகாண பொதுச் சேவையின் விற்பனை முகாமையாளர் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2018 | V | 01 |
| 06 | வடக்கு மாகாண பொதுச் சேவையின் வடிவமைப்பாளர் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2018 | VI | 01 |

## 02. ஆட்சேர்ப்பிற்கான சேவை நிபந்தனைகள் :-

02.1 வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் அவர்களால் அனுமதிக்கப்பட்ட **அட்டவணை – I** இல் காட்டப்பட்டுள்ள பதவிகளுக்குரிய சேவைப்பிரமாணக் குறிப்பு / ஆட்சேர்ப்புத் திட்டத்தில் விதந்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கும், தாபனவிதிக்கோவை ஏற்பாடுகள், நிதிப்பிரமாணங்கள் மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் **1817/30** ஆம் இலக்க **2013.07.03**ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட வடக்கு மாகாண அரச சேவைக்கான தாபன நடைமுறை ஒழுங்கு விதிக்கோவை ஆகியவற்றிற்கும் மற்றும் ஆட்சேர்ப்புக் காலத்தில் இவற்றில் மேற்கொள்ளப்படும் ஏதேனும் திருத்தங்களிற்கும் உட்பட்டு தெரிவுசெய்யப்பட்ட பரீட்சார்த்திகள் **அட்டவணை – I** இல் காட்டப்பட்டுள்ள பதவிகளின் தரம் III இற்கு நியமிக்கப்படுவர்.

02.2 திறந்த போட்டிப் பரீட்சையின் மூலம் நியமனத்திற்கு தேர்வு செய்யப்பட்ட பரீட்சார்த்திகள் நியமனத் திகதியிலிருந்து மூன்று (03) வருடங்களிற்கு தகுதிகாண்கால அடிப்படையில் மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் மூலம் நியமனத்திற்கு தகைமை பெற்ற பரீட்சார்த்திகள் நியமனத்திகதியிலிருந்து ஓராண்டு காலம் பதில் கடமை தகுதிகாண் கால அடிப்படையில் தரம் III பதவிக்கு நியமிக்கப்படுவர். இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். சேவைப் பிரமாணக்குறிப்பில் குறிப்பிடப்பட்டவாறு மேற்குறித்த **அட்டவணை – I** இல் குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட திகதியிலிருந்து மூன்று (03) வருட காலத்திற்குள் முதலாவது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும்.

02.3 இச்சேவைகள் இடமாற்றத்திற்குட்பட்ட சேவையாகும். இதனால் இந்நியமனம் பெறுபவர்கள் வடக்கு மாகாணத்தின் எப்பாகத்திலும் சேவையாற்ற வேண்டுமென்ற நிபந்தனைக்கும் கீழ்படிதல் வேண்டும்.

02.4 ஒரு சேவை நிலையத்தில் நியமனம் பெறுபவர், அதே சேவை நிலையத்தில் குறைந்தது ஐந்து (05) வருடங்கள் தொடர்ச்சியாக சேவையாற்றுதல் வேண்டும் என்பது கட்டாய நிபந்தனையாகும்.

02.5 பொது நிர்வாக சுற்றறிக்கை 01/2014 மற்றும் இது தொடர்பாகவும் அதனைத் தொடர்ந்து வரும் சுற்றறிக்கைகள் என்பவற்றுக்கமையவும் நியமனத் திகதியிலிருந்து ஐந்து (05) வருடங்கள் முடிவதற்கு முன்னர் குறித்துரைக்கப்பட்ட இரண்டாவது அரச கரும மொழியில் தேர்ச்சி பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

02.6 நியமனங்களின் எண்ணிக்கை மற்றும் நியமனம் அமுலுக்கு வரும் திகதி என்பன நியமன அதிகாரியினால் வரையறுக்கப்படும். நியமிக்கப்படவுள்ள ஆட்களின் எண்ணிக்கை **அட்டவணை – I**இல் காட்டப்பட்டவாறாகும். எனினும்அறிவிக்கப்பட்ட வெற்றிடங்கள் தொடர்பில் சில வெற்றிடங்கள் அல்லது சகல வெற்றிடங்களையும் நிரப்பாது விடுவதற்கான அதிகாரத்தினை நியமன அதிகாரி கொண்டுள்ளார்.

**03. சம்பள அளவுத்திட்டம் :-**

பொது நிர்வாகச் சுற்றறிக்கை 03/2016க்கு அமைவான, சம்பளத் தொகுதி **MN 1 - 2016** க்கு ஏற்ப **அட்டவணை - I** இல் குறிப்பிடப்பட்ட பதவிகளின் தரம் - III ற்கான திரட்டிய சம்பள விகிதமானது **ரூபா 27,140 – 10 x 300 - 11 x 350 - 10 x 495 – 10 x 660 – 45,540/-** ஆகும். (ரூபா 28,040 என்ற 3வது சம்பள படிநிலைக்கு முன் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையில் சித்திபெறல் வேண்டும்) எவ்வாறாயினும் மேற்படி சுற்றறிக்கையின் அட்டவணை – II இல் கூறப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக சம்பளம் வழங்கப்படும்.

**04. பொதுவான தகைமைகள் :-**

04.1 விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

04.2 விண்ணப்பதாரி வடக்கு மாகாணத்தின் எப்பாகத்திலும் கடமையாற்றக் கூடிய சிறந்த தேகாரோக்கியம் உள்ளவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் சிறந்த நன்னடத்தையும் உள்ளவராக இருத்தல் வேண்டும்.

04.3 அ) விண்ணப்பதாரி வடக்கு மாகாணத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்டவராக இருத்தல் வேண்டும். இவ் விண்ணப்ப முடிவுத்திகதிக்கு முன்னர் உள்ள ஆறு (06) ஆண்டு காலப்பகுதியில் ஆகக் குறைந்தது மூன்று (03) ஆண்டுகளாயினும் வடக்கு மாகாணத்தில் தொடர்ச்சியாக வசித்திருத்தல் வேண்டும்.

**அல்லது**

ஆ) விண்ணப்பதாரர் அல்லது பெற்றோர் வடக்கு மாகாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டிருப்பதுடன் ஆகக்குறைந்தது ஐந்து (05) வருடங்கள் வடக்கு மாகாணத்தில் தொடர்ச்சியாக வசித்திருத்தல் வேண்டும் (*நேர்முகப் பரீட்சையின் போது தமது தேருநர் இடாப்பின் உறுதிப்படுத்தப்பட்ட பிரித்தெடுப்பிதழை சமர்ப்பித்தல் வேண்டும்)

04.4 விண்ணப்பத்தை ஏற்கும் இறுதித் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் இப்பதவிக்காக கோரப்பட்ட **சகல தகைமைகளையும்** விண்ணப்பதாரி கொண்டிருத்தல் வேண்டும்.

**05. கல்வித் தகைமைகள் மற்றும் ஏனைய தகைமைகள் :-**

**05.1 நெசவுப் போதனாசிரியர் தரம் III இற்கு திறந்த போட்டிப் பரீட்சை மூலம் ஆட்சேர்ப்புச் செய்தல்**

**பரீட்சை இலக்கம் - I**

**(அ) கல்வித் தகைமைகள் :-**

க.பொ.த (சா/த) பரீட்சையில் **ஒரே அமர்வில்** மொழி (தமிழ் / சிங்களம்), கணிதம் ஆகிய பாடங்கள் உட்பட நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஆறு (06) பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**அத்துடன்**

க.பொ.த (உ/த) பரீட்சையில் ஆகக்குறைந்தது ஒரு பாடம் சித்தியடைந்திருத்தல் வேண்டும். (பொதுப் பரீட்சை நீங்கலாக)

**(ஆ) தொழிற்கல்வி / தொழில்சார் தகைமைகள் :-**

01. நெசவுக் கணக்கீடு தொடர்பாக ஆடைக் கைத்தொழில்த் திணைக்களத்தின் இறுதிப் பரீட்சையில் திறமைச் சித்தியுடன் சான்றிதழ் ஒன்றினைக் கொண்டிருத்தல் வேண்டும். (ஆடைக் கைத்தொழில்த் திணைக்களத்தால் நடாத்தப்படுகின்ற ஒருவருடப் பயிற்சி நெறி)

**அல்லது**

தேசிய தொழிற்தகைமை மட்டம் (N.V.Q Level) 02 / 03 சான்றிதழ் - நெசவு / ஆடைக் கைத்தொழில்

02. ஆட்சேர்ப்பு நேரத்தில் இப்பதவிக்கான வெற்றிடங்களின் எண்ணிக்கை தகுதிவாய்ந்த பரீட்சார்த்திகளின் எண்ணிக்கையிலும் குறைவாக காணப்படுமிடத்து ஆட்சேர்ப்பு நோக்கத்திற்காக கீழ்வரும் நெசவு தொடர்பான சான்றிதழ்களும் மேலதிக தகைமைகளாகக் கவனத்தில் கொள்ளப்படும்.

(i) அரச நுண்கலை நிறுவனத்தினால் வழங்கப்படுகின்ற உயர்தர சான்றிதழ்.

(ii) வணிக நெசவு நிறுவனத்தினால் / தொழிற்துறைத் திணைக்களத்தினால் வழங்கப்படும் சான்றிதழ்.

(iii) கைத்தறி நிலையம் ஒன்றில் ஒரு வருடம் நெசவாளராக கடமையாற்றிய அனுபவம் உள்ளதென தொழிற்துறைத் திணைக்களத்தினால் வழங்கப்படும் சான்றிதழ்.

**(இ)வயதெல்லை :-**

விண்ணப்பத்தை ஏற்கும் இறுதித் திகதியன்று விண்ணப்பதாரி **18 வயதிற்கு குறையாதவராகவும், 30 வயதிற்கு மேற்படாதவராகவும்** இருத்தல் வேண்டும்.

**05.2 நெசவுப் போதனாசிரியர் III இற்கு மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை மூலம் ஆட்சேர்ப்புச் செய்தல்** **பரீட்சை இலக்கம் - II**

**(அ) கல்வித் தகைமைகள் :-**

க.பொ.த (சா/த) பரீட்சையில் **இரண்டு அமர்வுகளுக்கு** மேற்படாமல் ஆகக்குறைந்தது இரண்டு (02) பாடங்களுக்கு திறமைச் சித்திகளுடன் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**(ஆ) தொழிற்கல்வி / தொழில்சார் தகைமைகள் :-**

நெசவுக் கணக்கீடு தொடர்பாக ஆடைக் கைத்தொழில்த் திணைக்களத்தின் இறுதிப் பரீட்சையில் திறமைச் சித்தியுடன் சான்றிதழ் ஒன்றினைக் கொண்டிருத்தல் வேண்டும். (ஆடைக் கைத்தொழில்த் திணைக்களத்தால் நடாத்தப்படுகின்ற ஒருவருடப் பயிற்சி நெறி)

**குறிப்பு :-**
ஆட்சேர்ப்பு நேரத்தில் இப்பதவிக்கான தகுதிவாய்ந்த பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை வெற்றிடங்களின் எண்ணிக்கையிலும் அதிகமாகக் காணப்படுமிடத்து ஆட்சேர்ப்பு நோக்கத்திற்காக கீழ்வரும் நெசவு தொடர்பான சான்றிதழ்களும் கவனத்தில் கொள்ளப்படும்.

(i) அரச நுண்கலை நிறுவனத்தினால் வழங்கப்படுகின்ற உயர்தர சான்றிதழ்.

(ii) வணிக நெசவு நிறுவனத்தினால் / தொழிற்துறைத் திணைக்களத்தினால் வழங்கப்படும் சான்றிதழ்.

(iii) கைத்தறி நிலையம் ஒன்றில் ஒரு வருடம் நெசவாளராக கடமையாற்றிய அனுபவம் உள்ளதென தொழிற்துறைத் திணைக்களத்தினால் வழங்கப்படும் சான்றிதழ்.

**அத்துடன்**

**(இ) அனுபவம் :-**

கைத்தொழிற் துறையில் ஒரு நிரந்தர நியமனத்தில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருடங்கள் தொடர்ச்சியான திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். அதற்கேற்ப அந்தத் திகதியினை சம்மந்தப்பட்ட திணைக்களத் தலைவர் அத்தகைய சேவை ஆவணங்களை சான்றுப்படுத்தல் வேண்டும்.

**(ஈ) வயதெல்லை :-**
மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பிப்பவர்களுக்கு **உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது**.

**05.3 சிறுகைத்தொழில் போதனாசிரியர் தரம் III இற்கு திறந்த போட்டிப் பரீட்சை மூலம் ஆட்சேர்ப்புச் செய்தல்** **பரீட்சை இலக்கம் - III**

**(அ) கல்வித் தகைமைகள் :-**

க.பொ.த (சா/த) பரீட்சையில் **ஒரே அமர்வில்** மொழி (தமிழ் / சிங்களம்), கணிதம் ஆகிய பாடங்கள் உட்பட நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஆறு (06) பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**அத்துடன்**

க.பொ.த (உ/த) பரீட்சையில் ஆகக்குறைந்தது ஒரு பாடம் சித்தியடைந்திருத்தல் வேண்டும். (பொதுப் பரீட்சை நீங்கலாக)

**(ஆ) தொழிற்கல்வி / தொழில்சார் தகைமைகள் :-**

விண்ணப்பதாரி பின்வரும் தொடர்புபட்ட துறைகளில் ஒரு வருடத்திற்கு குறையாத வேலை அனுபவத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும். (மட்பாண்டம், தச்சுத் தொழில், தும்பு வேலை, கொத்தனார் வேலை, நீர்க் குழாய் பொருத்துனர், மின்னியல் தொழில்நுட்பம், அலுமினியக் கட்டுமானம், கணினி வன்பொருள், இயந்திர எந்திரவியல் போன்றன) அத்துடன் விண்ணப்பதாரி தேசிய தொழிற் தகைமை (N.V.Q) மட்டம் - 03 இனைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**அல்லது**

விண்ணப்பதாரி தொடர்புபட்ட துறையில் தேசிய தொழிற் தகைமை (N.V.Q) மட்டம் - 04 இனைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். (மட்பாண்டம், தச்சுத் தொழில், தும்பு வேலை, கொத்தனார் வேலை, நீர்க் குழாய் பொருத்துனர், மின்னியல் தொழில்நுட்பம், அலுமினியக் கட்டுமானம், கணினி வன்பொருள், இயந்திர எந்திரவியல் போன்றன).

**அல்லது**

விண்ணப்பதாரி பின்வரும் தொடர்புபட்ட துறைகளில் ஒரு வருடத்திற்கு குறையாத வேலை அனுபவத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும். (மட்பாண்டம், தச்சுத் தொழில், தும்பு வேலை, கொத்தனார் வேலை, நீர்க் குழாய் பொருத்துனர், மின்னியல் தொழில்நுட்பம், அலுமினியக் கட்டுமானம், கணினி வன்பொருள், இயந்திர எந்திரவியல் போன்றன) அத்துடன் விண்ணப்பதாரி

தொழிற்துறைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற மூன்று மாதங்களுக்கு குறையாத பயிற்சிநெறியினைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**(இ) வயதெல்லை :-**

விண்ணப்பத்தை ஏற்கும் இறுதித் திகதியன்று விண்ணப்பதாரி **18 வயதிற்கு குறையாதவராகவும், 30 வயதிற்கு மேற்படாதவராகவும்** இருத்தல் வேண்டும்.

**05.4 சிறுகைத்தொழில் போதனாசிரியர் தரம் III இற்கு மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை மூலம் ஆட்சேர்ப்புச் செய்தல் பரீட்சை இலக்கம் - IV**

**(அ) கல்வித் தகைமைகள் :-**

க.பொ.த (சா/த) பரீட்சையில் **இரண்டு அமர்வுகளுக்கு** மேற்படாமல் ஆகக்குறைந்தது இரண்டு (02) பாடங்களுக்கு திறமைச் சித்திகளுடன் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**(ஆ) தொழிற்கல்வி / தொழில்சார்ந்த தகைமைகள் :-**

விண்ணப்பதாரி பின்வரும் தொடர்புபட்ட துறைகளில் ஒரு வருடத்திற்கு குறையாத வேலை அனுபவத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும். (மட்பாண்டம், தச்சுத் தொழில், தும்பு வேலை, கொத்தனார் வேலை, நீர்க் குழாய் பொருத்துனர், மின்னியல் தொழில்நுட்பம், அலுமினியக் கட்டுமானம், கணினி வன்பொருள், இயந்திர எந்திரவியல் போன்றன) அத்துடன் விண்ணப்பதாரி தேசிய தொழிற் தகைமை (N.V.Q) மட்டம் - 03 இனைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**அல்லது**

விண்ணப்பதாரி தொடர்புபட்ட துறையில் தேசிய தொழிற் தகைமை (N.V.Q) மட்டம் - 04 இனைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். (மட்பாண்டம், தச்சுத் தொழில், தும்பு வேலை, கொத்தனார் வேலை, நீர்க் குழாய் பொருத்துனர், மின்னியல் தொழில்நுட்பம், அலுமினியக் கட்டுமானம், கணினி வன்பொருள், இயந்திர எந்திரவியல் போன்றன).

**அல்லது**

விண்ணப்பதாரி பின்வரும் தொடர்புபட்ட துறைகளில் ஒரு வருடத்திற்கு குறையாத வேலை அனுபவத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும். (மட்பாண்டம், தச்சுத் தொழில், தும்பு வேலை, கொத்தனார் வேலை, நீர்க் குழாய் பொருத்துனர், மின்னியல் தொழில்நுட்பம், அலுமினியக் கட்டுமானம், கணினி வன்பொருள், இயந்திர எந்திரவியல் போன்றன) அத்துடன் விண்ணப்பதாரி தொழிற்துறைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற மூன்று மாதங்களுக்கு குறையாத பயிற்சிநெறியினைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**(இ) அனுபவம் :-**

கைத்தொழிற் துறையில் ஒரு நிரந்தர நியமனத்தில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருடங்கள் தொடர்ச்சியான திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். அதற்கேற்ப அந்தத் திகதியினை சம்மந்தப்பட்ட திணைக்களத் தலைவர் அத்தகைய சேவை ஆவணங்களை சான்றுப்படுத்தல் வேண்டும்.

**(ஈ) வயதெல்லை :-**

மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பிப்பவர்களுக்கு **உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது**.

**05.5 விற்பனை முகாமையாளர் தரம் III இற்கு திறந்த போட்டிப் பரீட்சை மூலம் ஆட்சேர்ப்புச் செய்தல் பரீட்சை இலக்கம் - V**

**(அ) கல்வித் தகைமைகள் :-**

க.பொ.த (சா/த) பரீட்சையில் **ஒரே அமர்வில்** மொழி (தமிழ் / சிங்களம்), கணிதம் ஆகிய பாடங்கள் உட்பட நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஆறு (06) பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**அத்துடன்**

க.பொ.த (உ/த) பரீட்சையில் ஆகக்குறைந்தது ஒரு பாடம் சித்தியடைந்திருத்தல் வேண்டும். (பொதுப் பரீட்சை நீங்கலாக)

**(ஆ) வயதெல்லை :-**

விண்ணப்பத்தை ஏற்கும் இறுதித் திகதியன்று விண்ணப்பதாரி **18 வயதிற்கு குறையாதவராகவும், 30 வயதிற்கு மேற்படாதவராகவும்** இருத்தல் வேண்டும்.

**05.6 வடிவமைப்பாளர் தரம் III இற்கு திறந்த போட்டிப் பரீட்சை மூலம் ஆட்சேர்ப்புச் செய்தல்**

**பரீட்சை இலக்கம் - VI**

**(அ) கல்வித் தகைமைகள் :-**

க.பொ.த (சா/த) பரீட்சையில் **ஒரே அமர்வில்** மொழி (தமிழ் / சிங்களம்), கணிதம் ஆகிய பாடங்கள் உட்பட நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஆறு (06) பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**அத்துடன்**

க.பொ.த (உ/த) பரீட்சையில் ஆகக்குறைந்தது ஒரு பாடம் சித்தியடைந்திருத்தல் வேண்டும். (பொதுப் பரீட்சை நீங்கலாக)

**(ஆ) தொழிற்கல்வி / தொழில்சார்ந்த தகைமைகள் :-**

நெசவுக் கணக்கீடு தொடர்பான திறமைச் சித்தியுடன் நெசவு ஆசிரியர் சான்றிதழ் ஒன்றினைக் கொண்டிருத்தல் வேண்டும். (ஆடைக் கைத்தொழில்த் திணைக்களத்தால் நடாத்தப்படுகின்ற ஒருவருடப் பயிற்சி நெறி)

**அல்லது**

ஆட்சேர்ப்பு நேரத்தில் இப்பதவிக்கான வெற்றிடங்களின் எண்ணிக்கை தகுதிவாய்ந்த பரீட்சார்த்திகளின் எண்ணிக்கையிலும் குறைவாக காணப்படுமிடத்து ஆட்சேர்ப்பு நோக்கத்திற்காக கீழ்வரும் நெசவு தொடர்பான சான்றிதழ்களும் மேலதிக தகைமைகளாகக் கவனத்தில் கொள்ளப்படும்.

(i) அரச நுண்கலை நிறுவனத்தினால் வழங்கப்படுகின்ற உயர்தரச் சான்றிதழ்.

(ii) வணிக நெசவு நிறுவனத்தினால் / தொழிற்துறைத் திணைக்களத்தினால் வழங்கப்படும் சான்றிதழ்.

(iii) கைத்தறி நிலையம் ஒன்றில் ஒரு வருடம் நெசவாளராக கடமையாற்றிய அனுபவம் உள்ளதென தொழிற்துறைத் திணைக்களத்தினால் வழங்கப்படும் சான்றிதழ்.

**(இ) வயதெல்லை :-**

விண்ணப்பத்தை ஏற்கும் இறுதித் திகதியன்று விண்ணப்பதாரி **18 வயதிற்கு குறையாதவராகவும், 30 வயதிற்கு மேற்படாதவராகவும்** இருத்தல் வேண்டும்.

## 06 ஆட்சேர்ப்பு முறை :-

06.1 எழுத்துப் பரீட்சை மூலம் திறமை அடிப்படையிலும், ஆட்சேர்ப்பு நேரத்தில் வலுவிலுள்ள பொது நிர்வாக சுற்றறிக்கைகள், ஆட்சேர்ப்புத் திட்டம், தேசிய மற்றும் மாகாண கொள்கைகள் என்பவற்றிக்கு அமைவாகவும் **அட்டவணை – I** இல் காட்டப்பட்டுள்ள பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படும். இவ்வறிவித்தலில் கோரப்பட்ட தகைமைகள் யாவும் நேர்முகப் பரீட்சையின்போது பரிசீலிக்கப்படும். தேவையான தகைமைகள் இல்லையெனத் தெரியவந்தால் இப்பதவிக்கான உரிமைகள் இரத்துச் செய்யப்படும். நேர்முகப்பரீட்சையின் போது சகல தகைமைகளும், ஆவணங்களும் பரிசீலிக்கப்படும். இதன் போது புள்ளிகள் எதுவும் வழங்கப்படமாட்டாது.

06.2 மேற்படி தகைமையடைந்துள்ள விண்ணப்பதாரிகளிலிருந்து, எழுத்துப்பரீட்சையில் தகைமைபெறும் பரீட்சார்த்திகள் பெற்ற மொத்தப் புள்ளிகளின் வரிசை ஒழுங்கில் நிலவும் வெற்றிடத்திற்கமைவாக நியமனத்திற்கான நேர்முகத் தேர்விற்கு தெரிவு செய்யப்படுவர்.

06.3 நெசவுப் போதனாசிரியர் மற்றும் சிறுகைத்தொழில் போதனாசிரியர் பதவிகளின் ஆட்சேர்ப்பின் போது, மேற்குறித்த பதவிகளில் **நிலவும் வெற்றிடத்தின் 30%** இற்கு மேற்படாமல் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சை மூலம் ஆட்சேர்ப்புச் செய்பவர்களூடாக நிரப்பப்படும்.

06.4 வெற்றிடத்தின் 03% விசேட தேவையுடையோருக்காக (மாற்றுத்திறனாளிகளுக்காக) ஒதுக்கப்படும். பரீட்சார்த்தி நியமனத்திற்காக தெரிவுசெய்யப்படும் போது குறித்த பதவியில் கடமையாற்றுவதற்கு தனது விசேட தேவையுடைய தன்மையானது தடையாக அமையாது என்பதனை விசேட மருத்துவப் பரிசோதனை மூலம் நிரூபித்தல் வேண்டும்.

## 07. பரீட்சைக் கட்டணம் :-

விண்ணப்பதாரி வதியும் வடக்கு மாகாணத்தில் அமைந்துள்ள பிரதேச செயலகமொன்றில் ரூபா **500.00**ஐ **வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளர்** அவர்களின் **“3401”** என்ற வைப்புக் கணக்கிற்குச் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டினை விண்ணப்பப் படிவத்தில் உரிய கூட்டினுள் கழராதவாறு ஒட்டி அனுப்புதல் வேண்டும். எக்காரணம் கொண்டும் இக்கட்டணம் மீளச் செலுத்தப்படமாட்டாது என்பதுடன் இக் கட்டணத்தை வேறு ஏதும் பரீட்சைக்கு மாற்றவும் அனுமதி வழங்கப்படவும்மாட்டாது.

## 08. விண்ணப்பிக்கும் முறை :-

08.1 இவ்வறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமைவாக A4 அளவிலான (21செ.மீ x 29செ.மீ) தாளின் 1 முதல் 10 வரையான பந்திகள் முதலாம் பக்கத்திலும், 11 முதல் 14 வரையான பந்திகள் இரண்டாம் பக்கத்திலும், ஏனையவை மறுபக்கத்திலும் உள்ளடங்கும் வண்ணம் விண்ணப்பப் படிவத்தைத் தயாரித்தல் வேண்டும். பூர்த்தி செய்த விண்ணப்பத்தை **19.10.2018** ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு, **"செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், இல: 393/48, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும்.

08.2 ஒன்றிற்கு மேற்பட்ட போட்டிப் பரீட்சைகளுக்கு விண்ணப்பிப்பதற்கு விரும்புபவர்கள், ஒவ்வொரு பரீட்சைகளுக்குமென தனித்தனியான விண்ணப்பப் படித்தினை அனுப்பி வைத்தல் வேண்டும் என்பதுடன். பரீட்சைக் கட்டணம் ஒவ்வொரு பரீட்சைகளுக்குமென தனித்தனியே செலுத்துதல் வேண்டும்.

08.3 விண்ணப்பம் / விண்ணப்பங்கள் அனுப்பிவைக்கப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் தாம் **"வடக்கு மாகாண பொதுச்சேவையின் தொழிற்துறைத் திணைக்களத்தின் கீழ்வரும் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த / மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சை – 2018"** குறிப்பிடப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னராக கிடைக்கின்ற விண்ணப்பங்களும், உரிய தகவல்களைப் பூர்த்தி செய்யாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

08.4 விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதியை தம்வசம் வைத்துக் கொள்ளல் பயனுள்ளதாகும். விண்ணப்பத்தின் புகைப்படப் பிரதி மற்றும் முன்னோடிப் பிரதி என்பன ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. பரீட்சைக்கான அனுமதி அட்டை மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுச் செயலாளர் அவர்களினால் அனுப்பிவைக்கப்படும். **பரீட்சைக்கான அனுமதி அட்டை அனுப்பிவைக்கப்படலானது விண்ணப்பதாரி சகல தகைமைகளையும் கொண்டுள்ளார் எனக்கருதப்படலாகாது.**

08.5 விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள தகைமையுள்ள விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அடடைகள் அனுப்பப்பட்டதும் பத்திரிகை அறிவித்தலொன்று வெளியிடப்படும். அறிவித்தல் வெளியாகி எவரேனும் பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சைத் திகதிக்கு குறைந்தபட்சம் மூன்று (03) நாட்களுக்கு முன்னரேனும் பரீட்சைக்கான அனுமதி அட்டை கிடைக்காவிடின், அனுமதி அட்டை கிடைக்காமைபற்றி பின்வரும் விபரங்களுடன் **"செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், இல: 393/48, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கு அறிவிக்க வேண்டும். (தொலைபேசி இல - **021 221 9939**, தொலைநகல் இல - **021 221 9940**)

**குறிப்பு :-**
கோரிக்கைக் கடிதம், விண்ணப்பப் படிவம் மற்றும் பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் சான்றுப்படுத்திய பிரதி, அனுமதி அட்டை அனுப்பி வைப்பதற்கான தொலைநகல் இலக்கம்.

08.6 பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகளினது விண்ணப்பப் படிவங்கள் கிடைத்தமை தொடர்பில் அறிவித்தல் எவையும் வழங்கப்படமாட்டாது. மேலும் விண்ணப்ப முடிவுத்திகதிக்கு முன்னர் கோரப்பட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்யாத விண்ணப்பங்கள் முன்னறிவித்தல் ஏதுமின்றி நிராகரிக்கப்படலாம் என்பதுடன் இவை தொடர்பான அறிவித்தல் எவையும் வழங்கப்படமாட்டாது.

## 09. ஆள் அடையாளத்தை நிரூபித்தல் :-

பரீட்சார்த்திகள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தங்களது ஆளடையாளத்தை நிரூபிக்குமாறு வேண்டப்படுகின்றனர். ஆளடையாளத்தை நிரூபிப்பதற்கு பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும்.

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை
(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு.

மேற்குறிப்பிடப்பட்ட ஆவணமொன்றை சமர்ப்பிக்கத்தவறும் பரீட்சார்த்தியொருவரின் பரீட்சார்த்தி உரிமை செயலாளர் மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம் அவர்களின் தற்றுணிபின்படி இரத்துச் செய்யப்படலாம். பரீட்சை நடாத்துதல் தொடர்பாக வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளரினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் அமைந்தொழுக வேண்டும். அச்சட்டதிட்டங்களை மீறினால் மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளரினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாதல் வேண்டும்.

## 10. பொய்யான தகவல்களுக்கான தண்டனை :-

விண்ணப்பப்பத்திரங்களைப் பூர்த்தி செய்யும்போது மிகக்கவனத்துடன் சரியான தகவல்களை அளித்தல் வேண்டும். இப்பரீட்சை விதிகளின் படி எவரேனும் விண்ணப்பதாரியொருவர் பரீட்சைக்கு முன்னரோ பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்பத்திலாவது தகைமையற்றவர் எனத் தெரியவருமாயின், அவரது பரீட்சார்த்தியுரிமை அச்சந்தர்ப்பத்தில் இரத்துச் செய்யப்படும். விண்ணப்பதாரி சமர்ப்பிக்கின்ற ஏதேனுமொரு தகவல் பொய்யானதெனத் தெரியவரும் எச்சந்தர்ப்பத்திலும் அவா் மாகாண அரச சேவையிலிருந்து நீக்கப்படலாம்.

## 11. கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :-

**ஒவ்வொரு விண்ணப்பதாரியும் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திக் கொள்வது கட்டாயமானதாகும்.** ஒரு அரச நிறுவனத்திலிருந்து விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரி தமது நிறுவனத் தலைவர் அல்லது அவர்சார்பில் கையொப்பமிட அதிகாரம் பெற்றவர் மூலமாக உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். ஏனைய விண்ணப்பதாரிகள் அப்பகுதியின் கிராம சேவையாளர், சமாதான நீதவான், சத்தியபிரமாண அதிகாரி, சட்டத்தரணி, நொத்தாரிசு, கடற்படை, தரைப்படை, ஆகாயப்படை ஆகியவற்றிலுள்ள ஆணைபெற்ற உத்தியோகத்தர், ரூபா 240,360.00 க்குக் குறையாத தொகையை வருடாந்த திரட்டுச் சம்பளமாகப் பெறும் நிரந்தர அரசாங்க அல்லது உள்ளூராட்சி அல்லது மாகாண உத்தியோகத்தர், மத பீடங்களுக்குப் பொறுப்பாகவுள்ள மதகுருமார் ஆகியோர்களில் ஒருவரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

## 12. பரீட்சைத் திட்டம் :-

### 12.1 நெசவுப் போதனாசிரியர் தரம் III பதவிக்கு திறந்த / மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை மூலம் ஆட்சேர்ப்புச் செய்தல்

இப்பரீட்சைகள் எழுத்துப் பரீட்சை மற்றும் தொழிற்பரீட்சை என இருபகுதிகளைக் கொண்டிருக்கும் எழுத்துப் பரீட்சையானது கீழ்க் குறிப்பிட்டவாறான இரண்டு (02) வினாத்தாள்களைக் கொண்டிருக்கும் என்பதுடன். இப்பரீட்சை தமிழ் மற்றும் சிங்களம் ஆகிய இரு மொழிகளில் நடாத்தப்படும். விண்ணபித்த மொழியை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

**01. எழுத்துப் பரீட்சை (திறந்த மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கு)**

| இல | வினாத்தாள் | வினாத்தாள் உள்ளடக்கம் | காலம் | மொத்தப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 01. | கைத்தறி தொடர்பான கணிதம் மற்றும் நெசவுப் பொதுஅறிவு | 1. மதிப்பீடு தயாரிக்கும் முறை<br>2. நேரம் கணித்தல் மற்றும் வேலை<br>3. உற்பத்தி – ஒவ்வொரு அலகு சம்பந்தமான செலவினக் கணிப்பீடு<br>4. தெனியர், ரெக்ஸ், பருத்தி நூல் ஆகியவற்றின் நூல்களைக் கணக்கெடுத்தல்<br>5. நூல்களின் எண்ணிக்கை, நிறை ஆகியவற்றை கணக்கெடுத்தல்<br>6. கைத்தறி உற்பத்தி சம்பந்தமான முக்கிய மூலப்பொருட்கள் ஆகியன<br>7. நூல்கள் தொடர்பான பொதுத் தேவைகளை அடையாளம் காணல்.<br>8. ஓட்டுதல், சாயம் போக்குதல், நிறமேற்றுதல், சாயம் போடல் ஆகியனபற்றி அறிந்திருத்தல்<br>9. உற்பத்தி செய்யப்பட்ட புடவை வகைகளை விற்பனை செய்வது தொடர்பான அறிவு<br>10. புடவைக் கைத்தொழில் சம்பந்தப்பட்ட இயந்திரங்களின் பெயர்கள் மற்றும் அவைகளின் பாவனை சம்பந்தமான அறிவு | 01 மணித்தியாலம் | 100 |
| 02. | கைத்தறி இயந்திரம் பற்றிய வரைபு மற்றும் துணி உற்பத்தி தொடர்பான திட்டங்களை வரைதல் | 1. இடது புறமான படம்<br>2. நிலையான பேட்டன் பக்கப்பார்வை முன்பக்கம்<br>3. சட்டில பெட்டியின் நீள அகலம்<br>4. நெசவுப் பாவு நூல் உருளையை அளவிடும் வரைபடம் உத்தரம் மற்றும் ஹெக் மற்றும் கிறில்<br>5. இரண்டு மிதிபலகையில் துவாய் நெசவிடுவதற்கான வரைவு<br>6. ஹீல்ஸ் அடுக்கு முறையில் அமைத்தல்<br>7. 2, 4, 6, 8 என்ற தொடரில் ஹீல்ஸ் அடுக்கு முறைமையை அமைத்தல் | 01 மணித்தியாலம் | 100 |

**02. தொழிற் பரீட்சை (திறந்த போட்டிப் பரீட்சைக்கு)**

| புள்ளிகள் வழங்கப்படும் பிரதான விடயங்கள் | காலம் | உச்ச புள்ளிகள் |
|---|---|---|
| **அ). கைத்தறியை ஒழுங்கு படுத்துதல்**<br>01. நூலை அடையாளம் காணுதல்<br>02. நெசவுப்பாவு நூல் மற்றும் குறுக்கிழை சுற்றுதல்<br>03. நெசவுப்பாவு நூல் அமைத்தல் | 30 நிமிடங்கள் | 50 |
| **ஆ). நெசவு செய்தல்**<br>01. கால்மிதியை ஒழுங்குபடுத்தல்<br>02. நெசவு செயன்முறை | 30 நிமிடங்கள் | 50 |
| **மொத்தம்** | **01 மணித்தியாலம்** | **100** |

**குறிப்பு :-**

நெசவுப் போதனாசிரியர் தரம் III இற்கான திறந்த போட்டிப் பரீட்சை மூலமான ஆட்சேர்ப்பானது எழுத்துப் பரீட்சை மற்றும் தொழிற் பரீட்சை ஆகியவற்றின் மொத்தப் புள்ளிகளின் வரிசை ஒழுங்கில் மேற்கொள்ளப்படும்.

### 12.2 சிறுகைத்தொழில் போதனாசிரியர் தரம் III இற்கு திறந்த / மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை மூலம் ஆட்சேர்ப்புச் செய்தல்

இப் பரீட்சைகள் கீழ்வருமாறு இரண்டு (02) வினாத்தாள்களைக் கொண்டிருக்கும். இது தமிழ் மற்றும் சிங்களம் ஆகிய இரு மொழிகளில் நடாத்தப்படும். விண்ணப்பித்த மொழியை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது. ஒவ்வொரு பதவிக்குமான பாடவிதானங்கள் வருமாறு.

| இல | வினாத்தாள் | வினாத்தாள் உள்ளடக்கம் | காலம் | மொத்தப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 01. | பொது உளச்சார்பு | இவ்வினாத்தாளானது தர்க்க அடிப்படையிலான திறமை, பகுத்து ஆராயும் புத்திக்கூர்மை, முடிவெடுக்கும் திறன் மற்றும் எண்கணித திறமை ஆகியவைகள் தொடர்பாக பரீட்சார்த்தியினுடைய அறிவுசார் திறனைப் பரீட்சிக்கும் வகையில் அமைந்திருக்கும். | 01 மணித்தியாலம் | 100 |
| 02. | பொது அறிவு | இவ்வினாத்தாளானது பொருளாதார அபிவிருத்தி, அரசியல், கல்வி, கலாசாரம், சமூகம், விஞ்ஞான விவகாரங்கள், விளையாட்டு, சிறுகைத்தொழில்துறை ஆகிய விடயங்களுடன் தேசிய மற்றும் சர்வதேச விவகாரங்கள் தொடர்பாக பரீட்சார்த்தியினுடைய அறிவினைப் பரீட்சிப்பதற்கான வினாக்களைக் கொண்டிருக்கும். | 01 மணித்தியாலம் | 100 |

### 12.3 விற்பனை முகாமையாளர் தரம் III இற்கு திறந்த போட்டிப் பரீட்சை மூலம் ஆட்சேர்ப்புச் செய்தல்

இப் பரீட்சைகள் கீழ்வருமாறு இரண்டு (02) வினாத்தாள்களைக் கொண்டிருக்கும். இது தமிழ் மற்றும் சிங்களம் ஆகிய இரு மொழிகளில் நடாத்தப்படும். விண்ணப்பித்த மொழியை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது. ஒவ்வொரு பதவிக்குமான பாடவிதானங்கள் வருமாறு.

| இல | வினாத்தாள் | வினாத்தாள் உள்ளடக்கம் | காலம் | மொத்தப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 01. | பொது உளச்சார்பு | இவ்வினாத்தாளானது தர்க்க அடிப்படையிலான திறமை, பகுத்து ஆராயும் புத்திக்கூர்மை, முடிவெடுக்கும் திறன் மற்றும் எண்கணித திறமை ஆகியவைகள் தொடர்பாக பரீட்சார்த்தியினுடைய அறிவுசார் திறனைப் பரீட்சிக்கும் வகையில் அமைந்திருக்கும். | 01 மணித்தியாலம் | 100 |
| 02. | பொது அறிவு | இவ்வினாத்தாளானது பொருளாதார அபிவிருத்தி, அரசியல், கல்வி, கலாசாரம், சமூகம், விஞ்ஞான விவகாரங்கள், விளையாட்டு, சிறுகைத்தொழில்துறை ஆகிய விடயங்களுடன் தேசிய மற்றும் சர்வதேச விவகாரங்கள் தொடர்பாக பரீட்சார்த்தியினுடைய அறிவினைப் பரீட்சிப்பதற்கான வினாக்களைக் கொண்டிருக்கும். | 01 மணித்தியாலம் | 100 |

### 12.4 வடிவமைப்பாளர் தரம் III இற்கு திறந்த போட்டிப் பரீட்சை மூலம் ஆட்சேர்ப்புச் செய்தல்

இப் பரீட்சைகள் கீழ்வருமாறு மூன்று (03) வினாத்தாள்களைக் கொண்டிருக்கும். இது தமிழ் மற்றும் சிங்களம் ஆகிய இரு மொழிகளில் நடாத்தப்படும். விண்ணப்பித்த மொழியை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது. ஒவ்வொரு பதவிக்குமான பாடவிதானங்கள் வருமாறு.

| இல | வினாத்தாள் | வினாத்தாள் உள்ளடக்கம் | காலம் | மொத்தப் புள்ளிகள் |
|---|---|---|---|---|

| | | | | |
|---|---|---|---|---|
| 01. | பொது உளச்சார்பு | இவ்வினாத்தாளானது தர்க்க அடிப்படையிலான திறமை, பகுத்து ஆராயும் புத்திக்கூர்மை, முடிவெடுக்கும் திறன் மற்றும் எண்கணித திறமை ஆகியவைகள் தொடர்பாக பரீட்சார்த்தியினுடைய அறிவுசார் திறனைப் பரீட்சிக்கும் வகையில் அமைந்திருக்கும். | 01 மணித்தியாலம் | 100 |
| 02. | பொது அறிவு | இவ்வினாத்தாளானது பொருளாதார அபிவிருத்தி, அரசியல், கல்வி, கலாசாரம், சமூகம், விஞ்ஞான விவகாரங்கள், விளையாட்டு, சிறுகைத்தொழில்துறை ஆகிய விடயங்களுடன் தேசிய மற்றும் சர்வதேச விவகாரங்கள் தொடர்பாக பரீட்சார்த்தியினுடைய அறிவினைப் பரீட்சிப்பதற்கான வினாக்களைக் கொண்டிருக்கும். | 01 மணித்தியாலம் | 100 |
| 03. | செயன்முறைப் பரீட்சை | இச்செய்முறைப் பரீட்சையானது வடிவமைத்தல், வரைதல், நிற ஒற்றுமை, புடவைக் கைத்தொழில் துறையின் நவீன வடிவமைப்பு, கைவினைப் பொருட்களின் நவீன வடிவமைப்பு ஆகியவற்றின் அடிப்படை அறிவைப் பரீட்சிக்கும் வகையிலான வினாக்களைக் கொண்டு வடிவமைக்கப் பட்டிருக்கும். | 01 மணித்தியாலம் | 100 |

**குறிப்பு** :-

இப்பரீட்சை ஒரு போட்டிப் பரீட்சையாக இருப்பதால் நேர்முகத் தேர்விற்கு தகைமை பெறுவதற்காக ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ள புள்ளிகளில் குறைந்தபட்சம் நாற்பது வீதத்தை (40%) பரீட்சார்த்திகள் பெற்றுக்கொள்ள வேண்டும். நேர்முகப் பரீட்சையின் போது விண்ணப்பதாரிகள் இப் போட்டிப் பரீட்சையில் பெற்ற மொத்தப் புள்ளிகளின் வரிசை ஒழுங்கு (Merit Order) கருத்தில் கொள்ளப்படும்.

**13.** பரீட்சார்த்திகளுக்கான பரீட்சைப் பெறுபேறுகள் வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு செயலாளர் அவர்களால் www.np.gov.lk என்ற வடக்கு மாகாண இணையத்தளம் மூலம் வெளியிடப்படும். பின்னர் பரீட்சைக்குத் தோற்றிய ஒவ்வொரு பரீட்சார்த்திக்கும் தபால் மூலமாக அனுப்பிவைக்கப்படும்.

**14.** இப் பரீட்சையை நடாத்துதல் அல்லது இரத்துச் செய்தல் தொடர்பான அதிகாரம் வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு உண்டு. இவ் விளம்பரத்தில் தமிழ் மற்றும் சிங்களம் ஆகிய மொழி உரைகளுக்கிடையில் ஏதேனும் வேறுபாடு காணப்படும் பட்சத்தில் தமிழ் மொழி உரையே மேலோங்குதல் வேண்டும்.

**15.** இப் பரீட்சை தொடர்பான அறிவித்தலினை www.np.gov.lk என்ற வடக்கு மாகாண இணையத்தளத்திலும் பார்வையிடலாம்.

**அ.சிவபாலசுந்தரன்.**
செயலாளர்,
மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு,
வடக்கு மாகாணம்.
21.09.2018